**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 733/2025-ல்**

**அசல் வழக்கு எண். 115/2009**

பி.சேட்டு .... மனுதாரர்/1ம் பிரதிவாதி

**//எதிர்//**

திருமதி.எம்.தவமணி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.உதயகுமார், B.sc., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஆனந்த், B.E., LL.B., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A(3) -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் சில ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி

ஆவணங்களானது மனுதாரர் தரப்புக்கு முக்கியமான ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்களை மனுதாரர் வீட்டில் உள்ள பழைய பெட்டியில் இருந்து தேடி எடுத்து தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ மேற்படி ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யக்கூடாது என்று இருக்கவில்லை. இப்பொழுது அங்கீகரித்துக் கொள்ளாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும். ஆகவே, அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

ஆகவே, அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்தக்கொள்ளும்படி உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **<u>மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்க கூடியதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டியது. அதனை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார்.

மேற்படி அசல் வழக்கின் இடைநிலை மனுவில் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்க கோரி மனுவில் காலத்துடன் தாக்கல்

செய்யாததற்கு உரிய விளக்கங்கள் கொடுக்காமல் வெறுமனே தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரரின் செல்வாக்கை தவறாக பயன்படுத்தி பெறப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களுக்கும், அசல் வழக்கிற்கும் உள்ள தொடர்பை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அதனை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவணங்கள் வழக்கிற்காக பின் யோசனை செய்து உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் என்ற வகையில் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

மனுதாரர் அசல் வழக்கில் அவருக்குள்ள கட்சியினை நிரூபணம் செய்வதற்கு ஆதரவான ஆவணங்கள் என்று தெரிவித்து வழக்கினை திசை திருப்பும் நோக்கில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்ற வகையிலும் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது.

ஆகவே மனுதாரர்கள் கோரியுள்ள யாதொரு பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்ற வகையில் மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) **<u>தீர்வு</u>:-**

**1.** மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பில் விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வருகிறது.

**4.** மேற்படி மனுதாரர் அசல் வழக்கில் சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மேற்படி ஆவணங்கள் மனுதாரர் வீட்டில் உள்ள பழைய பெட்டியில் இருந்து தேடி எடுத்து தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. அசல் வழக்கை தீர்மானிப்பதற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு இயற்கை நீதியின் பொருட்டு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்ட போதிலும், இம்மனுவினை அனுமதிப்பதால் 1ம் எதிர்மனுதாரருக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது.

**5.** மேலும், 1ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்போகும் 1 முதல் 7 வரையிலான ஆவணங்களை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி

ஆவணங்களின் தன்மை குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கும், ஆவணங்களை பொறுத்து ஆட்சேபணை செய்வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதாலும், மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மேலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

6) **முடிவில்,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.09 15:18:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.09 15:18:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 733/2025-ல்**

**அசல் வழக்கு எண். 115/2009**

திரு.பி.சேட்டு, வயது 60, த/பெ.பிச்சை, இந்து, வசிப்பிடம் காமராஜர் காலனி, தாமரைக்குளம் வடகரை, மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன்.

.... மனுதாரர்/1ம் பிரதிவாதி

**// எதிர்//**

திருமதி.எம்.தவமணி, வயது 60, க/பெ.மணி, இந்து, வசிப்பிடம் காமராஜர் காலனி, தாமரைக்குளம் வடகரை, மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன்.

.... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவில் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A(3) -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள் :-** 03.12.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :-** 08.12.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.உதயகுமார், B.sc., B.L., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஆனந்த், B.E., LL.B., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 09-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.01.09 15:18:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.